සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education - NWP

## மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் 07 - 2023 (2024)
## Third Term Test - Grade 07 - 2023 (2024)

## கிறிஸ்தவம்

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

- 1-5 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடுக.

ஏதேன் தோட்டத்தை பாதுகாத்தல் என்பது,
i. முழு படைப்பையும் பாதுகாத்தல்.
ii. ஏதேனில் உள்ள விலங்குகளை பாதுகாத்தல்.
iii. ஏதேனில் உள்ள மர செடி கொடிகளை பாதுகாத்தல்.
iv. ஏதேனில் உள்ள பறவைகளை பாதுகாத்தல்.

02. திருப்பாடல் 103ஆல் விவரிக்கப்படுவது,
i. ஆண்டவரின் இரக்கம்    ii. ஆண்டவரின் நிலையான அன்பு
iii. ஆண்டவரின் தண்டனை    iv. ஆண்டவரின் கோபம்

03. திருமுழுக்கு யோவானின் விசேட பணியை முன்னறிவித்த இறைவாக்கினர் யார்?
i. ஆமோஸ்    ii. ஏசாயா    iii. யோனா    iv. எரேமியா

04. இலங்கையில் பிரித்தானியா வேதாகம சங்கத்தின் கிளை ஆரம்பிக்கப்பட்டது,
i. 1915    ii. 1905    iii. 1835    iv. 1812

05. முழு வேதாகமத்தையும் எழுதுவதற்கு எடுத்த காலம்,
i. 100 வருடங்கள்    ii. 1000 வருடங்கள்    iii. 400 வருடங்கள்    iv. 1800 வருடங்கள்

- 06 - 10 வரை தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் (பிழை) எனவும் குறிப்பிடுக.

06. கிளாதியு பேரரசன் காலத்தில் உலகம் முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ( )

07. இயேசு கற்பிப்பதற்கு எளிமையான உவமைகளை பயன்படுத்தினார். ( )

08. எமது வாழ்விலும் தூய ஆவியின் வழிநடத்தல் உண்டு. ( )

09. யூதர்கள் தொழுகை கூடங்களில் இறைவார்த்தையை கற்றுக் கொண்டனர். ( )

10. பாஸ்கா விழாவன்று சீடர்கள் மீது தூய ஆவி இறங்கினார். ( )

- 11 - 15 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையினை அடைப்பிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
  (3000, சமாரியபெண், தூய ஆவியின், இயேசு, விசுவாசம் )

11. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை ..................................... ஆகும்.

12. சீடர்கள் ..................................... வல்லமையால் பிற மொழிகளில் பேசினர்.

13. நான் மெசியாவை கண்டேன் எனக் கூறியவர் ..................................... ஆவார்.

14. ..................................... ஒரு நல்லயனாக விளங்கினார்.

15. பேதுரு ஆற்றிய முதல் உரையில் ..................................... பேரளவிலான மக்கள் சபையில் சேர்ந்தனர்.

- 16 - 20 வரையுள்ள வினாக்களுக்கு A பகுதிக்கு பொருத்தமான விடையை B பகுதியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

| | A | B |
|---|---|---|
| 16. | திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டின் இலத்தின் மொழிபெயர்ப்பு | வேதாகமம் |
| 17. | இறைவனின் வார்த்தையாக விளங்குவது | தோமா |
| 18. | இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நட என கூறியவர் | வல்கேட் |
| 19. | நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள் என கூறியவர் | தலைமை மதத்தவர்களும் மறைநூல் அறிஞர்களும் |
| 20. | பிறரை விடுவித்தவருக்கு தன்னை விடுவிக்க முடியவில்லை எனக் கூறியவர்கள் | பேதுரு |

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

முதலாம் வினா கட்டாயமானதாகும். முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்க.

01. சுருக்கமான விடை எழுதுக.
   1. திருமுழுக்கு யோவானின் பெற்றோரின் பெயரை குறிப்பிடுக.
   2. வானில் இருந்து அடையாளம் ஒன்றை காட்டுமாறு இயேசுவிடம் கேட்டவர்கள் யாவர்?
   3. இயேசுவின் உடல் எனக் கருதப்படுவது?
   4. “நான் உன் கால்களை கழுவாவிட்டால் என்னோடு உனக்கு பங்கு இல்லை” என இயேசு யாரிடம் கூறினார்?
   5. இயேசு சிலுவையில் கூறிய வார்த்தைகள் இரண்டு தருக?
   6. இயேசுவின் அன்பு சீடன் என அழைக்கப்படுபவர் யார்?
   7. கிறிஸ்தவ பிள்ளையாகிய நீர் வளர்த்துக் கொள்ளக்கூடிய பண்புகள் இரண்டு தருக?
   8. நீர் உமது பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் இரண்டு தருக?

02. 1. பெந்தகோஸ்தே தினத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் இரண்டு தருக?
   2. ஆரம்பத் திருச்சபையில் காணப்பட்ட பண்புகள் மூன்று தருக?
   3. ஞாயிறு தினத்தை பரிசுத்தமாக ஆசரிக்க நீர் செய்யும் செயல்கள் மூன்று தருக?

03. 1. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள் இரண்டு தருக?
   2. இறைப் பிள்ளையாகிய உமக்கு ஏற்படும் சோதனைகள் மூன்று தருக?
   3. உமக்கு சோதனை ஏற்படும் பொழுது அதை தாங்கிக் கொள்வதற்கு தேவையான பலனை வேண்டி ஜெபம் ஒன்று எழுதுக?

04. 1. இறைப் படைப்பில் மேன்மையான படைப்பு யாது?
   2. மனிதன் படைப்பை அழிக்கு முறைகள் மூன்று தருக?
   3. இறைப் படைப்பை பாதுகாக்க நீர் செய்யக்கூடிய செயற்பாடுகள் மூன்று தருக?

05. 1. திருவிவிலியத்தில் கூறப்படும் பொன் விதியை எழுதுக?
   2. இயேசு கிறிஸ்து வாழ்ந்த சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட மூன்று மக்கள் பிரிவினரைத் தருக?
   3. உமக்கு தீங்கு செய்பவர்களுக்காக நீர் செய்யக் கூடியவை மூன்று தருக?

06. பின்வருவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக
   1. வேதாகமம்
   2. திருமுழுக்கு யோவான்
   3. பெந்தகோஸ்தே விழா
   4. குருவானவர் வில்லியம் கேரி